# OUP – உலகளாவிய தனியுரிமைக் கொள்கை

| வரலாற்றுப் பதிவை மாற்றுக | | | |
|---|---|---|---|
| **பதிப்பு** | **தேதியை மாற்றுக** | **நோக்கம்** | **ஆசிரியர்** |
| **1** | 2018 | முதல் பதிப்பு | தனியுரிமைக் குழு |
| **1.1** | நவம்பர் 2022 | சிறிய புதுப்பிப்புகள் | ஓ அலி |
| **1.2** | மார்ச் 2023 | சிறிய புதுப்பிப்புகள் | எம் கென்னடி |
| **2** | மார்ச் 2023 | ஒப்புதல் | ஜே படேல் |
| **2.1** | 07/09/2023 | சிறிய புதுப்பிப்புகள் | எம் கென்னடி |
| **3.0** | 04/10/2023 | ஒப்புதல் | ஜே படேல் |
| **3.1** | 24/11/2023 | rights.requests@oup.com என்பதை DSR.Requests@oup.com என மாற்றவும் | எம் கென்னடி |
| | | | |

## 1. அறிமுகம்

1.1. ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் ("OUP") உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கும் பொருந்தக்கூடிய இடங்களில், இங்கிலாந்து தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2018, இங்கிலாந்து பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை, ஐரோப்பிய ஒன்றிய பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை, கலிஃபோர்னியா நுகர்வோர் தனியுரிமைச் சட்டம், குழந்தைகளின் இணையத் தனியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், குடும்பக் கல்வி உரிமைகள் மற்றும் தனியுரிமைச் சட்டம் உட்பட உலகெங்கிலும் உள்ள பொருந்தக்கூடிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்களை மதிப்பதற்கும் உறுதிபூண்டுள்ளது. இந்தத் தனியுரிமைக் கொள்கை, இதை நாங்கள் எவ்வாறு செய்கிறோம், இது எவ்வாறு OUP இணையதளங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துகையில் பொருந்தும் என்பதையும் விளக்குகிறது.

## 2. உங்கள் தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு பயன்படுத்துகிறோம்

2.1. OUP தயாரிப்புகள் மற்றும் சேவைகளை விளம்பரப்படுத்துவதற்கும் வழங்குவதற்கும் எங்கள் வலைத்தளங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், எங்கள் வணிகத்தை நடத்துவதற்கும் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துகிறோம். நாங்கள் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்களின் வகைகள், அந்த தனிப்பட்ட தகவல்களை நாங்கள் செயல்படுத்தும் குறிப்பிட்ட வழிகள், அவ்வாறு செய்ய எங்களை அனுமதிக்கும் சட்ட அடிப்படைகள், உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள்

பகிரக்கூடிய கூட்டாளர்களின் வகைகள் ஆகியவை குறித்த கூடுதல் தகவல்களை இந்தப் பக்கத்தில் தந்துள்ளோம்.

2.2. சில சமயங்களில் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக (உ.ம். உங்கள் ஆர்டரை அனுப்புவதற்கு உங்கள் முகவரி தேவைப்படுவது), உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் கேட்கிறோம். அந்த தனிப்பட்ட தகவல்களை நீங்கள் வழங்கவில்லை என்றால், உங்கள் கோரிக்கை அல்லது ஆர்டரை எங்களால் நிறைவேற்ற முடியாது.

2.3. உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்தினாலும், அதன் இரகசியத்தன்மை, வழுவாமை, கிடைக்கும் தன்மையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எங்களிடம் உள்ளன. ISO 27001 ஐ அடைவதும், தரவுகள் தொலைந்து போவது, திருடப்படுவது அல்லது அங்கீகரிக்கப்படாத வழியில் பயன்படுத்தப்படுவது ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க பல தொழில்நுட்ப மற்றும் நிறுவன பாதுகாப்பு நடைமுறைகளை செயல்படுத்துவதும் இதில் அடங்கும். OUP-யின் தடுப்புப் பாதுகாப்புகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, privacy@oup.com என்ற முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

## 3. சம்மதம் அளித்தலும் திரும்பப் பெறுதலும் மற்றும் உங்கள் தனிப்பட்ட தரவைப் புதுப்பித்தல்

3.1. உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குவதற்கு உங்கள் ஒப்புதல் தேவைப்படும் இடத்தில், உங்கள் தரவை வழங்கும் இடத்தில் உங்கள் சம்மதத்தைக் கேட்போம். எந்த நேரத்திலும் உங்கள் ஒப்புதலை திரும்பப் பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது. உங்கள் தனிப்பட்ட தகவல்களை எந்த நேரத்திலும் நீங்கள் புதுப்பிக்கவும் செய்யலாம். இவற்றில் எதையேனும்

நீங்கள் செய்ய விரும்பினால், எங்களது [தனிப்பட்ட தரவு கோரிக்கைப் படிவத்தை] நிரப்பவும் அல்லது rights.requests@oup.com என்ற முகவரியில் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

3.2. உங்கள் தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்பினருக்கு விற்க மாட்டோம்.

# 4. உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் சேமித்தல், இடமாற்றம் செய்தல் மற்றும் தக்கவைத்தல்

4.1. உங்கள் தனிப்பட்ட தகவல்கள் அவை சேகரிக்கப்பட்ட நாட்டுக்கு வெளியே சேமிக்கவோ செயலாக்கம் பெறவோ கூடும். இதில் ஐக்கிய இராச்சியம் ("இங்கிலாந்து") மற்றும் ஐரோப்பிய பொருளாதாரப் பகுதி ("EEA") ஆகியவை அடங்கும். UK/EEA-வுக்குள் உள்ள அல்லது வேறு நாட்டிலுள்ள மற்றவர்களுக்கு தகவல்களை அனுப்பும்போது, உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்க முறையான பொருத்தமான பாதுகாப்பு அரண்களையும் தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் எடுக்கப்படுவதை உறுதிசெய்கிறோம். ஐக்கிய இராச்சியத்தில் உருவான தனிப்பட்ட தகவல்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்கக்கூடியதாக அடையாளம் காணப்பட்ட நாடுகளுக்கு மட்டுமே அல்லது உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்க ஏற்கப்பட்ட இடமாற்ற வழிமுறைகள் எங்களிடம் இருக்கும்பட்சத்தில் மூன்றாம் தரப்பினருக்கு மட்டுமே தரவுகளை அனுப்புவோம். UK/EEA-யிலிருந்து தனிப்பட்ட தகவல்களை அனுப்புவதற்காக, நாங்கள் சர்வதேச தரவுப் பரிமாற்ற ஒப்பந்தங்கள், ஐக்கிய இராச்சிய தகவல் ஆணையாளரின் அலுவலகத்தாலும் ஐரோப்பிய ஆணையத்தாலும் ஒப்புதலளிக்கப்பட்ட தரநிலையுள்ள ஒப்பந்த விதிகளை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். எங்கள் வழங்குநர்களால் ஏற்படுத்தப்படும் பிணைக்கும் பெருநிறுவன விதிகளைப் பயன்படுத்துகிறோம் அல்லது உலகெங்கிலுமுள்ள சட்டங்களின்படி தேவையான இதுபோன்ற நடவடிக்கைகளை அமல்படுத்துகிறோம். privacy@oup.com என்ற முகவரியில் எங்கள் தரவுப் பாதுகாப்பு அதிகாரிக்கு மின்னஞ்சல் அனுப்பிக் கோருவதன் பேரில் உங்கள் பார்வைக்காக தொடர்புடைய செயற்பாட்டின் நகலைப் பெறலாம்.

4.2. எதற்காக உங்கள் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காக மற்றும் பதிவுகளைத் தக்க வைத்திருப்பது தொடர்பாக உள்ள ஏதேனும் சட்ட அல்லது ஒழுங்குமுறை கடப்பாடுகளுக்கு இணங்குவதற்காக, நியாயமாகத் தேவைப்படும் காலம் வரை ம்ட்டுமே பதிவுகளை நாங்கள் பேணிவருவோம். உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக செயலாக்குவதை நிறுத்துவதற்கான கோரிக்கைகளை நாங்கள் மதிக்கிறோம். வருங்காலத்தில் உங்கள் கோரிக்கையை நாங்கள் மதிக்கும்விதத்தில் உங்கள் கோரிக்கையின் பதிவைக் காலவரையின்றி வைத்திருப்பதும் இதில் அடங்கும்.

# 5. குக்கீகள்

5.1. எங்கள் வலைத்தளங்களில் குக்கீகளையும் எங்கள் செயலிகளிலும் பிற மென்பொருளிலும் இதே போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறோம். இது உங்களுக்கு எவ்வாறு பொருந்தக்கூடும் என்பதற்கான விவரங்களுக்கு எங்கள் குக்கீ கொள்கையைப் பார்க்கவும்.

## 6. உங்கள் உரிமைகள்

6.1. உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகுவது, சரிசெய்வது அல்லது அழிப்பதற்கான உரிமை, அவற்றைச் செயல்படுத்துவதைத் தடைசெய்யும் உரிமை, அவற்றைச் செயலாக்குவதை ஆட்சேபிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. OUP-யின் சட்டப்பூர்வ நலன்களின் அடிப்படையில் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் செயலாக்கப்படுவதை எதிர்ப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. நேரடி மார்க்கெட்டிங் நோக்கங்களுக்காக உங்களுக்கு நேரடி மார்க்கெட்டிங் அனுப்புவதையும் அதில் உங்களைச் சேர்ப்பதையும் ஆட்சேபிக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது. விவரிக்கப்பட்டுள்ள ஏதேனும் உரிமைகளை நீங்கள் பயன்படுத்த விரும்பினால், எங்களது தனிப்பட்ட தரவு கோரிக்கைப் படிவத்தை நிரப்பவும் அல்லது rights.requests@oup.com என்ற முகவரியில் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

6.2. இந்தத் தனியுரிமைக் கொள்கை தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், privacy@oup.com என்ற முகவரியில் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

6.3. நீங்கள் வசிக்கும், பணிபுரியும் அல்லது மீறல் நேர்ந்துள்ளதாக நம்பும் நாட்டில் உள்ள தரவுப் பாதுகாப்பு மேற்பார்வை ஆணையத்திடம் உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குவது குறித்துப் புகார் அளிக்க

உங்களுக்கு உரிமை உண்டு.

## 7. எங்களைத் தொடர்புகொள்ளுதல்

7.1. இணையதள், தயாரிப்பு, சேவை அல்லது எங்களுக்கு உங்கள் தனிப்பட்ட தகவல்களை நீங்கள் வழங்கிய படிவத்தில் வேறுவகையில் சுட்டிக்காட்டியிராத பட்சத்தில், எங்கள் வலைத்தளங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான தரவுக் கட்டுப்பாட்டாளராக ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், Great Clarendon Street, Oxford OX2 6DP, United Kingdom என்ற பெயரில் வர்த்தகம் செய்யும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் வேந்தர், முதுநிலை மற்றும் அறிஞர்கள் உள்ளனர். எடுத்துக்காட்டாக, www.oupe.es என்ற வலைத்தளத்தின் மூலம் உங்கள் தனிப்பட்ட தரவுகளை நீங்கள் வழங்கியிருந்தால், Oxford University Press España S.A. தரவுக் கட்டுப்பாட்டாளராக இருக்கும். உங்கள் தரவுக் கட்டுப்பாட்டாளர் யார் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால் அல்லது இந்தக் கொள்கை தொடர்பான பிற கேள்விகள் இருந்தால், OUP-யின் தரவுப் பாதுகாப்பு அதிகாரியை அதே முகவரியில் தொடர்புகொள்ளலாம் அல்லது மின்னஞ்சல் மூலம் privacy@oup.com என்ற மின்னஞ்சல் முகவரியில் அணுகலாம்.